<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

MCOP No.4/2014 Date: 06.07.2023.

PW2- பெத்தநாயகம்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1ம் எதிர்மனுதாரர் ராஜபாளையத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் சிவகாசியிலுள்ள 2ம் எதிர்மனுதாரரிடம் வாகனத்தை காப்பீடு செய்திருந்தார் என்றால் சரிதான். நான் ராஜபாளையம் வட்டம், சேத்தூரில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். விபத்து ராஜபாளையத்தில் இருந்து தென்காசி செல்லும் சலையில் நடைபெற்றது என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லியுள்ள எனது சங்ககிரி முகவரி எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பது செல்லாது என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை வரம்பு இல்லை என்றால் சரியல்ல. விபத்தின் போது மொத்தம் ஆட்டோ ஓட்டுநர் சேர்த்து 5 பேர் சென்றோம். மொத்தம் 7 பேர் பயணம் செய்ததால் காப்பீடு விதியை மீறியதற்காக 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்டது சாதாரண காயம் என்றால் சரிதான். எனக்கு அதனால் வருமான இழப்பு ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனம் இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-பெத்தநாயகம்

Sd/-Tr.N.Panneerselvam,
Sub Judge, Sankari